# இலங்கையில் அரச நிறுவனங்களில் நிலவும் வெளிப்படைத் தன்மை: கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்தை மையப்படுத்திய ஆய்வு.

**F.A. Minha, F. Jesna**
South Eastern University of Sri Lanka
wafameenu@gmail.com, jesnajeswerdeen@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

ஒரு நாட்டினுடைய ஜனநாயனத்தை அளவிடும் கருவிகளில் ஒன்றாக வெளிப்படைத்தன்மை காணப்படுவதுடன், நல்லாட்சியின் பண்புகளில் ஒன்றாகவும் வெளிப்படைத்தன்மை காணப்படுகின்றது. வெளிப்படைத்தன்மை என்பதனை தீர்மானம் எடுத்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தலில் ஒழிவு மறைவின்றி மக்களின் கவனத்திற்கு கொண்டுவருதல் எனப்பொருள் கொள்ளப்படுகின்றது. இவ்வாறு ஒழிவு மறைவற்ற தன்மையினைப் பின்பற்றுவதன் மூலம் ஊழல், மோசடி என்பவற்றைத் தவிர்ப்பதுடன், பொறுப்புக் கூறக் கூடிய தன்மையும் ஏற்படுத்த முடியும். எனவே இவ்வாய்வானது அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்ற 20 பிரதேச செயலகங்களுள் ஒன்றான கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்தினை மையப்படுத்தி செய்யப்பட்டுள்ளது. கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகமானது கல்முனை, மருதமுனை, நட்பிட்டிமுனை, கல்முனைக் குடி ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாகும். ஒரு அரசின் நிருவாக விடயங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களில் முக்கிய பங்கு பிரதேச செயலகங்களிடமே காணப்படுகின்றது. இருப்பினும் இந்நிறுவனங்களின் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான வெளிப்படைத்மை குறைவாகவே காணப்படுவதை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே இவ்வாய்வானது கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்தில் வெளிப்படை தன்மை குறைவாக இருப்பதைக் கண்டறிதல் மற்றும் வெளிப்படைத்தன்மையுடைய பிரதேச செயலகமாக மாற்றமுறச் செய்தல் ஆகிய காரணிகளை கண்டறிதலே இவ்வாய்வின் நோக்கமாகக் காணப்படுகிறது. இவ்வாய்வானது பண்பு ரீதியான அம்சத்தினை கொண்டிருப்பதால் இவ்வாய்விற்கான தரவுகளானது 1ஆம் மற்றும் 2ஆம் தரவு நிலை மூலாதாரங்களில் இருந்து பெறப்பட்டுள்ளது. 1ஆம் நிலைத் தரவு மூலகங்களாக அவதானம் நேர்க்காணல் என்பற்றின் மூலமும் 2ஆம் நிலை தரவு மூலாதாரங்களாக புத்தகங்கள், அறிக்கைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளங்கள் மூலமாகவும் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட தகவல்களை விவரனரீதியாக பகுப்பாய்வு செய்வதன் மூலமாக கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்தின் வெளிப்படைத் தன்மை குறைவாக இருப்பதற்கான காரணிகளாக ஊழியர்களின் அலட்சியப் போக்கு, மக்களின் தீவிர அக்கறைக் காட்டாமை, ஊழில் செயற்பாடுகள், காலதாமதம், அரசியல் செல்வாக்கு, போதிய அளவு வசதி வாய்ப்பின்மை, அளவுக்கு அதிகமான ஆளனி காணப்படுதல் என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன.

***பிரதான சொற்பதங்கள்***: *அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை, திறந்த அரசாங்கம், அரசாங்க நிறுவனங்கள், தொடர்பாடல் அரசாங்கம்.*

## அறிமுகம்

ஒரு நாட்டினுடைய ஜனநாயகத்தை அளவிடும் கருவிகளில் ஒன்றாக வெளிப்படைத் தன்மை காணப்படுகிறது. வெளிப்படைத் தன்மையின் மையக் கருத்ததுக்கள் எனும் போது அதன் நீடித்து நிலைத்து நிற்கும் தன்மை, சமுகப் பொறுப்புக்களுக்கு ஒத்தாசை செய்தல், மற்றும் வியாபார நிறுவனங்களின் குணநலன், எண்பனவாகும்.

அண்மையில் வெளியாகிய அதிகமான வெளியீடுகள் வெளிப்படுத்தகின்ற மிக முக்கிய விடயம் யாதெனில் அரசாங்க நிறுவனங்களிடையே காணப்படும் வெளிப்படைத் தன்மையின் குறைபாடு என்பதேயாகும். இதன் நிமிர்த்தமே transparency international என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு, அரசாங்க நிறுவனங்களிடையே எவ்வாறு வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கச் செய்வது

என்பது குறித்த பல ஆய்வுகளை மேற் கொண்டு வருகின்ற அதே நேரம், இலங்கை அரசிலும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு அரசாங்க நிறுவனங்களின் வினைத்திறனை அதிகரித்து அதனை மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும். என்பதும் ஆழமாக வலியுறுத்தகின்றது.

இவ் ஆய்வின் முக்கிய விடயம் நல்லாட்சியொன்றின் மிகப் பிரதானமான கூறுகளுள் ஒன்றான காணப்படும் வெளிப்படைத்தன்மையானது இலங்கையின் நிர்வாக அலகுகளுள் முக்கிய அலகாக விளங்கும் பிரதேச செயலகங்களில் இவ்வம்சம் எவ்வாறு செயற்பட்டுவருகின்றது என்பதாகும். மேலும் வெளிப்படைத்தன்மை என்ற அம்சம் இந்நிறுவனங்களிற்கு எவ்வளவு முக்கியமானதும், இன்றியமையாததுமான ஒரு விடயமாகும் என்பது பற்றி ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதாகும். இவ் ஆய்வானது அம்பாறை மாவட்டத்தின் 20 பிரதேச செயலகங்களுள் ஒன்றான கல்முனை முஸ்லிம் செயலகத்தை மையப்படுத்தியுள்ளது. இந்த நிறுவனத்தை மையப்படுத்தி மேற்கொள்ளும் ஆய்வானது ''நல்லாட்சியின்'' இன்றியமையாத கூறுகளுள் ஒன்றாக காணப்படும் வெளிப்படைத்தன்மை இந்நிறுவனங்களில் செயற்படுகின்ற விதம் பற்றியதாகும்.
1993.10.10 த்தில் முழு அதிகார நிர்வாக அலகாக ஆரம்பிக்கப்பட்ட கல்முனை பிரதேச செயலகத்திலன் நோக்கமென கூறப்படுவது கல்முனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களின் வாழ்கைத்தரத்தை மேம்படுத்துவதேயாகும்.மேலும் மக்களுக்கான மனிதாபிமான சேவைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதுமாகும். (www.kalmunai ds.gov.lk)

இந்த ஆய்வின் இறுதியின் ஒட்டு மொத்த அரசுகளும் ஒரே அரசியல் யாப்பை அடியொட்டியதாகவும், ஒரே அரசியல் கொள்கைகளை பின்பற்றுபவனவையாகவே அன்று தொடக்கம் இன்று வரை இயங்கி வருகின்றன.இந்த கண்ணோட்டத்தில் இன்றைய 21ம் நவீன யுகத்தில் மனிதனுடைய அறிவு பல் கோணங்களிலும் வியாபித்துள்ளது. அரசியல் அறிவும் இதற்கு விதிவிலக்கல்ல. மக்கள் அரசாங்கத்தின் செயற்பாடுகள், நடவடிக்கைகள், சட்டதிட்டங்களை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கும் அதே நேரம் கேள்விக்கணைகளையும் கேட்கத்துவங்கி விட்டமை மரபு ரீதியாக செயற்பட்டு வரும் இலங்கை போன்ற வளர்முக நாடுகளின் அரசாங்க அமைப்பில், அதன் போக்கில் சர்ச்சைக்குறிய ஒரு நிலையை ஏற்படுத்தி விட்டது என்று தான் கூற வேண்டும்.

இதன் பின்னணியிலேயே இது வரை ஒளிவு மறைவாக இருந்த 'வெளிப்படைத்தன்மை' என்ற அம்சம் மக்கள் மத்தியில் 'பிரபல்யப்படுத்தப்பட்டு அரசாங்கமும் அதன் தேவைப்பாட்டை வெகுவாக உணர்ந்து இதனை ஓரளவு அமுலாக்கம் செய்ய முன்வந்துள்ளது என்று தான் கூறவேண்டும். இதன் மூலம் அரசாங்கம் கொண்டு வரும் எந்தக் கொள்கைகளையும், செயற்பாடுகளையும், மக்கள் தீர்ப்புக்காக வேண்டி அதனை விமர்சிக்கவும், ஊடகங்கள் துணை கொன்டும் மற்றும் மேலும் காணப்படும் வழிமுறைகள் மூலமும் பகிரங்கப்படுத்தி மக்கள் அது குறித்து கேள்விகளைத் தாராளமாக எழுப்பி பொதுசன அபிப்பிராயத்தை ஏற்படுத்த வழி செய்துள்ளன.

எந்த ஒரு அரசாங்க நிறுவனத்திலும் சென்று தமக்குறிய சந்தேகங்களைக் கேட்டு நிவர்த்தி செய்து கொள்ளலாம். இதற்கான பிரதன சட்டமாக தகவல் அறியும் உரிமைச்சட்டம் காணப்படுகிறது. ஆயினும் இது இலங்கை போன்ற வளர்முக நாட்டில் இதன் செயற்பாடு எத்தகையது? உண்மையிலேயே இது நடைமுறைப்படுத்தப்படுகிறதா? எந்தளவு சாத்தியப்பட்டுள்ளது? என்பதை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு முறைகள்**

ஒரு ஆய்வினை மேற்கொள்ள ஆய்வு முறைமைகள் இன்றியமையாததாகும் இந்த அடிப்படையில் இவ்வாய்வானது பண்பு ரீதியான ஆய்வாகக் காணப்படுவதனால் இவ்வாய்விறகான தரவுகள் முதலாம் நிலை, இரண்டாம் நிலை மூலாதாரங்களில் இருந்து பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவு மூலகங்களாக எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலக ஊழியர்கள், பிரதேச செயலகத்திற்கு வருகைத்தந்த மக்களிடம் நேர் காணல் மூலமும், அவதானம் என்பவற்றின் மூலமும் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளானது வெளிப்படைத் தன்மை எனும் எண்ணக்கரு சார்ந்த புத்தகங்கள், பிரதேச செயலக அறிக்கைகள் மற்றும் இணையத்தளம் என்பவற்றின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**பகுப்பாய்வும், முடிவுகளும்**

உலக வளர்முக நாடுகளுள் இலங்கையும் ஆரம்ப காலனித்துவத்துக்குற்பட்ட ஒரு சிறிய நாடாகவே காணப்படுகிறது. அந்த வகையில் 1948.02.04.ல் முழுமையான சுதந்திரமடைந்த நாடென கூறப்படினும் 1972ம் ஆண்டு வரை எவ்வாறு காணப்பட்டு வந்துள்ளது? அன்றிலிருந்து இன்று வரை நல்லாட்சியில் கூறப்படும் ஜனநாயக பண்புகளை கொண்ட அரசாக மாறியுள்ளதா? அல்லது இன்றும் ஜனநாயகமெனும் போர்வையில் தான் செயற்படுகிறதா? என்பதும் ஒரு புதிராகவே காணப்படுகிறது. இவ்வாறு சமுகத்தில் எழுந்த வினாக்களுக்கமைய நாங்கள் மேற்கொண்ட இந்த ஆய்வில் இலங்கையில் காணப்படுகின்ற அரசாங்க நிறுவனங்களின் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை காணப்படுகின்றதா? அது எவ்வாறு நல்லாட்சியின் ஜனநாயகப் பண்பாக அமைகிறது என்பதாகும்.

அந்த வகையில் பரந்துபட்ட இவ்வாய்வில் எமது மையப் பகுதியான ‘‘கல்முனை’’ முஸ்லிம் பிரதேச செயலகத்தில் வெளிப்படைத்தன்மையின் செல்வாக்கும், அதன் செயற்பாட்டுக் குறைகளும், பற்றியே எமது பகுப்பாய்வுகளும், முடிவுகளும் காணப்படுகிறது.

அவ்வாறு எம்மால் பெற்றுக்கொள்ளப்பட்ட பகுப்பாய்வும், முடிவுகளுமாக:

- ஊழியர்களின் பொடுபோக்குச் செயல்: குறித்த வேலை நேரங்களில் தமது சொந்த தேவைகளுக்காக செலவிடுதல். (மதிய உணவிற்கான இடைவேளை நேரமாக வழங்கப்படும் (12.30-1.30) ஒரு மணித்தியாளம் தவிர்ந்த மேலதிகமாக சுமார் 1 மணித்தியாளத்தை இடைவேளைக்காக பயன்படுத்துதல்.
- ஊழியரிடையே ஒற்றுமையின்மை: மக்களிற்காக குறித்த ஒரு திட்டத்தை நிரைவேற்றுவதில் ஊழியர்களிடையே ஒருமித்த கருத்து நிலவாமை.
- மக்களின் ஒத்துழைப்பின்மை: கல்முனை பிரதேச செயலகத்தின் மூலம், வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும் போது போதிய அளவு மக்களின் ஒத்தழைப்பு காணப்படுவதில்லை.
- அரசியல் ஊழல்: அதாவது அரச அதிகாரிகள் சட்டத்திற்க்கு புறம்பான தனிப்பட்ட இலாபங்களுக்காக அரச அதிகாரத்தை பயன்படுத்துவதாகும். நுப: (கையாடல், கப்பம், நிதி மோசடி) அரசாங்கத்தின் மூலம் பிரதேச சபைகளுக்கென அதிகாரங்கள் சரியான முறையில் வரையறுக்கப்படாத சந்தர்ப்பங்களிலேயே இதனை பயன்படுத்தி தவறிழைக்க முனைகின்றனர்.
- அரசியல் பழிவாங்கள்: அரசியல் ரீதியிலான அல்லது தனது சொந்த விரோதங்களுவக்காக மக்களுக்கு சேவை வழங்குணர்களாக காணப்படும் பிரதேச சபை உறுப்பினர்களின் கவனயீனம், பழிவாங்கள்கள் என்பனவும் ஏதுவாய் அமைந்துவிடுகின்றன.

- காலதாமதப்படுத்தல்: ஒரு வேளை குறித்து அல்லது சேவை குறித்து பொதுமக்களை நீண்ட கால இடைவெளியின் பின்னர் அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றல்.

- அரசியல் நெருக்கடிகள்: உயர் அதிகாரிகளின் கட்டளைக்கிணங்கி நடக்க நேர்வதால் மக்கள் நலன்கள், சேவைகள், சில சந்தர்ப்பங்களில் சரிவர நிறைவேற்றப்படுவதில்லை.
  eg: ( பயங்காட்டுதல்,கொலைமிரட்டல்)

- வன்முறையும், அநீதியும்: சில நெருக்கடியான சந்தர்ப்பங்களில் பிரதேச சபை தனது சேவைகளை நிறைவேற்ற தாமதப்படுத்தின் அல்லது தடைப்படின் மக்கள் உண்மை நிலவரம் அறியாது கிளர்ச்சிகளை மேற் கொள்ளல்.

- அரசியல் செல்வாக்கு: குறித்த ஒரு அரசியல்வாதி கருதுகின்ற பட்சத்தில் ஒரு நபரிற்கோ, அல்லது குழுவிற்கோ, அல்லது சமூகத்திற்கோ, அல்லது நிறுவனத்திற்கோ அவர்களது தேவைகளை இலகுபடுத்தி நிறைவேற்றிக் கொடுக்க அழுத்தம் கொடுத்தல்.அதே நேரம் சாதாரன பொது மக்கள் தனது காரியங்கள்,மற்றும் நலன்கள் தொடர்பில் அவதியுறும் நிலையே காணப்படுகிறது.

- இலஞ்சம் கோரல்: அரசாங்கம் மூலம் மக்களுக்கென சேவை செய்ய ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்களில் ஒன்றே பிரதேச சபைகள். ஆயீனும் இன்றைய நிலையில் இலவச சேவையும் பணச்சேவையாகவே மாறியுள்ளமைகளையும் அவதானிக்க முடிகிறது.

- அதிகாரக் குவிப்பு: உள்ளூர் மட்ட அளவில் காணப்படும் சிறிய அரசாங்க நிறுவனங்களாக காணப்படுவதால் அதெற்கென உறிய அதிகாரங்களோ, நிதிப் பங்கீடுகளோ வழங்கப்படுவது குறைவாகவே காணப்படுகிறது.

- பக்கச்சார்பு: குறிப்பிட்ட பிரதேச மக்களுக்காக செயற்பட வேண்டிய பொருட்கள் சேவைகள் அரசியல் பக்கச் சார்பு காரணமாக வேறு பிரதேச மக்களைச் கென்றடைதலும் உண்மையில் கிடைக்க வேண்டிய நபர்களைத் தவிர்த்து ஏனைய நபர்களுக்கு கிடைத்தலும் வருந்தத்தக்க விடயமாகும்.

**முடிவுரை:**

நல்லாட்சியைக் கட்டியெழுப்புவதோடு, அதன் மூலமான ஜனநாயகத் தன்மையையும், மக்கள் நலனையும், பேணுவது கடினமானதொன்றாயினும் ஒவ்வொரு அரசாங்கத்தினதும் வெற்றிகரமான அடைவுமட்டமாக அதுவே காணப்படுகிறது. அந்த வகையில் நல்லாட்சியின் பண்புகளில் ஒன்றான ''வெளிப்படைத்தன்மை'' என்ற அம்சம் முக்கியமானதொரு விடயமாகும் .
அரசாங்க நிறுவனங்களிடையே ஜனநாயகத்தை பேணும் வகையில் இந்த வெளிப்படைத்தன்மை காணப்பட வேண்டியது இன்றியமையாததாகும். வெளிப்படைத்தன்மையுடன் ஒரு நிறுவனம் செயற்படும் போதே அது நல்லாட்சியின் ஜனநாயக தன்மையோடு செயற்படுவதை அறிய முடிகிறது. எமது ஆய்வின் மையப்பகுதியான ''கல்முனை'' பிரதேச சபையின் வெளிப்படைத் தன்மை குறித்தே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த வகையில் அதிகமான சிறுபான்மையின மக்கள் வாழ்கின்ற பகுதியான வட கிழக்கிற்குற்பட்ட பகுதியில் ‘கல்முனை பிரதேச சபை’ அமைந்துள்ளது. ஏனைய பகுதிகளில் பெறும்பான்மையினர் பெறும் சலுகைகள் இப்பகுத்களிற்கு கிடைக்கப் பெறுவதில்லை. நிதி மற்றும் வளப்பங்கீடு, மக்கள் நலச் சேவைகள் என்பன சிறப்புற குறித்தவாறு இடம்பெற காலதாமதம் காணப்படுகிறது. எனவே இலங்கை திருநாட்டடில் இன்றைய நிலையில் கூறப்படும் நல்லாட்சியில் அதற்கான தீர்வுகள் முன்வைக்கப்பட்ட போதும் அவை குறித்த முறையில் இடம்பெற மேலும் சில சட்டதிட்டங்களுக்குட்படட வகையில் உள்ளுர் மட்டத்திலும் சகல பல்லின மக்கள் வாழும் பகுதிகளிலும் சம சலுகைகளும், சேவைகளும் கிடைக்கப்பெற அரசாங்கம் வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

**உசாத்துனைகள்:**

Daniel Golman biederman p.w warren G.Bennis jemes o toole (2008) Transparency: how leaders create a culture.

Rupert Spira (2008) The Transparency of Things:comtemplating the Nature of Experience.

Micah L. Sifry (2011) Wikileaks and the Age of Transparency.
Robert G.vaughn (2014) reseach handbook on Transparency.
David Brin (1998) The Transparent Society.
www.transparency.org
www.tiarilanka.org
www.tradingeconomics.com